
சீறத்துன்னபி ﷺ
நாள் 17

# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: நபி (ஸல்) அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கிய ஹம்ஸா (ரலி)
- பகுதி 2: ஹம்ஸா (ரலி) இஸ்லாத்தைத் தழுவுதல்
- பகுதி 3: அறியாமைக் காலத்தில் வாழ்ந்த உமர் (ரலி)
- பகுதி 4: உமர் (ரலி) இதயத்தில் இஸ்லாம் நுழைந்த நிகழ்வு

## பகுதி 1: நபி (ஸல்) அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கிய ஹம்ஸா (ரலி)

- அபிசீனியாவிற்குச் சென்ற முஸ்லிம்கள் அங்கு வாழத் தொடங்கியபோது, மக்காவில் முஸ்லிம்களின் மொத்த மக்கள் தொகை 35 முதல் 40 பேர் வரையே இருந்தனர்.



- அல்லாஹ் அந்த நேரத்தில் இரண்டு முக்கிய மனிதர்களை இஸ்லாத்திற்கு அழைத்து வந்ததன் மூலம், முஸ்லிம்களுக்கு பெரும் ஆதரவையும், பாதுகாப்பையும் அளித்தான்.

- அது ஹம்ஸா (ரலி) மற்றும் உமர் (ரலி) இஸ்லாத்தைத் தழுவியதே. இது நபித்துவத்தின் 6 ஆம் ஆண்டில் நடந்தது.

- ஹம்ஸா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற நிகழ்வு உண்மையில் சுவாரசியமானது.

- ஹம்ஸா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தையும், அப்துல் முத்தலிபின் மகனும் ஆவார்.

- ஒரு நாள், நபி (ஸல்) அவர்கள் ஸஃபா மலைக்கு அருகில் இருந்தபோது, அபூஜஹ்ல் அங்கு வந்தான். அப்போது அவன் மோசமான மனநிலையில் இருந்தான்.

- அவன் நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்தவும், சபிக்கவும் தொடங்கினான். மேலும், மிகவும் முரட்டுத்தனமாகவும், மோசமான முறையிலும் நடந்து கொண்டான்.

- அவன் நபி (ஸல்) அவர்களையும், அவர்களது முன்னோர்களையும் இதுவரை சபிக்காத அளவுக்கு சபித்தான். நபி (ஸல்) அவர்கள் அனைத்தையும் தாங்கிக்கொண்டு அமைதியாக இருந்தார்கள். இறுதியாக, அபூஜஹ்ல் அங்கிருந்து சென்றுவிட்டான்.

- இதனைப் பார்த்துக்கொண்டிருந்த பனுஹாஷிம் குலத்துப் பெண்கள் மிகவும் கோபமடைந்தனர். அவர்களின் பழங்குடிப் பெருமைக்கு இழுக்கு ஏற்பட்டுவிட்டதாக எண்ணினர். 'எங்கள் குடும்பத்தில் உள்ள ஒருவரை இழிவுபடுத்துவதற்கும், எங்கள் தந்தை மற்றும் முன்னோர்களை இழிவுபடுத்துவதற்கும் இவன் யார்?' என்று கேள்வி எழுப்பினர்.

- பனுஹாஷிம் குலத்தைச் சேர்ந்த ஆண்கள் யாரும் அங்கு இல்லை. ஆனால் அப்போதுதான், ஹம்ஸா (ரலி) தனது வேட்டைப் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பி வந்தார்கள் . அந்தப் பெண்கள் அவர்களைச் சூழ்ந்துகொண்டு நடந்ததை விவரமாகக் கூறினார்கள்.

- அவர்கள் முழு சம்பவத்தையும் விளக்கிவிட்டு, ''நீங்கள் என்ன வகையான தலைவர். உங்கள் சொந்த சகோதரர் மகனை யாரோ ஒருவன் வந்து சபித்து, இழிவுபடுத்துகிறான். அவரைக் காக்க யாரும் துணை நிற்கவில்லை'' என்று கூறினார்கள்.

- மேலும் அப்பெண்கள், அபூஜஹ்ல் எவ்வாறு அவர்களின் குடும்பத்தையும், முன்னோர்களையும் ஏசினான் என்று விளக்கிக் கூறினார்கள். இதைக்கேட்ட ஹம்ஸா (ரலி) அவர்களின் இரத்தம் கொதிக்க ஆரம்பித்தது.

- ''இவ்வாறு நடக்கும்போது அந்த இடத்தில் வேறு ஆட்கள் இருந்தார்களா?'' என்று ஹம்ஸா (ரலி) கேட்டார்கள்.

- அதற்கு அப்பெண்கள், ''ஆம்! மக்கா முழுவதுமே அந்த நிகழ்ச்சிக்கு

சாட்சியாக இருந்தது'' என்று பதிலுரைத்தார்கள்.

- ஹம்ஸா (ரலி) அதிக கோபம் அடைந்தார்கள். மேலும், ஆத்திரத்தில் அவர்கள் தனது வில், அம்பு மற்றும் வேட்டையாடும் கருவிகளுடன் கஃபாவை நோக்கி விரைந்து, அபூஜஹ்ல் தனது சகாக்களுடன் அமர்ந்திருந்த இடத்தை அடைந்தார்கள்.

- ஹம்ஸா (ரலி) தனது வில்லை எடுத்து அபூஜஹ்லின் முகத்தில் அடித்தார்கள். காயத்தால் அபூஜஹ்ல் முகத்தில் இரத்தம் பீறிட்டது.

- பின்பு ஹம்ஸா (ரலி), ''என்னுடைய சகோதரர் மகனைச் சபிக்க உனக்கு எவ்வளவு தைரியம்!'' என்றார்கள்.

- பின்னர் தான் என்ன சொல்கிறோம் என உணராமல், ''நானும் அவருடைய மதத்தைப் பின்பற்றுபவன்தான்'' என்று கூறிவிட்டார்கள்.

- ஹம்ஸா (ரலி) ஆவேசத்தில் இப்படிச் சொன்னது கஃஅபாவைச் சுற்றிக் கூடியிருந்த அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதேபோல் ஹம்ஸா (ரலி) அவர்களும் அதிர்ச்சியடைந்தார்கள்.

- அபூஜஹ்லின் பனுமக்ஸூம் குலத்தைச் சேர்ந்த மக்கள் எழுந்து நின்று, ஹம்ஸா (ரலி) அவர்களைத் தாக்க முற்பட்டனர்.

- ஆனால், அபூஜஹ்ல் அவர்களைத் தடுத்துவிட்டு, ''அவரை விட்டுவிடுங்கள். இன்றைக்கு அவருடைய சகோதரர் மகனை, நான் இதுவரை சபிக்காத அளவுக்கு சபித்து விட்டேன்'', என்று கூறினான்.

- ஹம்ஸா (ரலி) திகைப்புடனும், குழப்பத்துடனும் வீடு திரும்பினார்கள்.

## பகுதி 2: ஹம்ஸா (ரலி) இஸ்லாத்தைத் தழுவுதல்

- ஹம்ஸா (ரலி) இஸ்லாத்தை ஏற்பதற்கான எந்த எண்ணமும் அவரிடம் இருந்ததில்லை. ஆனால், இப்போது அந்த வார்த்தைகளைக் கூறிய பிறகு, அவரால் ஏற்காமல் இருக்க முடியவில்லை.

- அவர்கள் அல்லாஹ்விடம், ''யா அல்லாஹ்! நான் குரைஷிகளின் தலைவர்களில் ஒருவன் என்பதை நீ அறிவாய். நான் திரும்பப் பெற முடியாத

ஒன்றைச் சொல்லிவிட்டேன்.''

- ''எனவே, இந்த விஷயம் உண்மையாக இருந்தால், என் மனதை அதன் மூலம் நல்வழியில் செலுத்திவிடு. இல்லையென்றால், இப்போதே என்னை மரணிக்கச் செய்துவிடு'', என்று துஆ செய்தார்கள்.

- அவர்கள் அந்த இரவு முழுவதும் தூக்கமின்றி, புரண்டு புரண்டு படுத்திருந்தார்கள்.



- மறுநாள் அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் சென்று நடந்ததை விளக்கமாக கூறினார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் காலை முழுதும் அவருக்கு இஸ்லாத்தின் கொள்கைகளைப் போதிப்பதில் செலவு செய்தார்கள். அனைத்தையும் கேட்ட ஹம்ஸா (ரலி), ''நீங்கள் உண்மையாளர் என்றும், நீங்கள் உண்மையைப் பேசுகிறீர்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன். இனிமேல், என் முன்னோர்களின் பல தெய்வ வணக்கத்திற்கு நான் திரும்ப விரும்பவில்லை'', என்று கூறினார்கள்.

- இவ்வாறாக குரைஷிகளின் ஒரு பெரிய தலைவரின் ஆதரவு கிடைத்துவிட்டதால்,

ஹம்ஸா (ரலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவியது, நபி (ஸல்) அவர்களுக்கு ஒரு பெரிய ஊக்கமாக இருந்தது.

- ஹம்ஸா (ரலி) அவர்கள் அப்துல் முத்தலிபின் மகன் மற்றும் அபுதாலிபின் சகோதரர். எனவே குரைஷிகள், முஸ்லிம்கள் மீது வீசப்படும் அவமானங்களைத் தாங்கள் தடுக்க வேண்டும் என்று ஒப்புக்கொண்டனர்.

## பகுதி 3: அறியாமைக் காலத்தில் வாழ்ந்த உமர் (ரலி)

- ஹம்ஸா (ரலி) இஸ்லாத்தைத் தழுவிய சில நாட்களுக்குப் பிறகு உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவினார்கள். அது வெறும் மூன்று நாட்கள் கழித்து நடந்தது என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

- நபி (ஸல்) அவர்கள், ‘‘யா அல்லாஹ்! அபூஜஹ்ல் அல்லது உமர் இப்னு அல்கத்தாப் ஆகிய இந்த இரு மனிதர்களில், உனக்கு மிகவும் பிரியமான ஒருவரால் இஸ்லாத்திற்கு மகிமையைக் கொடுப்பாயாக!’’ என்று துஆ செய்தார்கள். இது இப்னு உமர் (ரலி) அறிவிப்பதாக திர்மிதியில் உள்ள ஒரு ஹதீஸ்.

- இந்த இரண்டு மனிதர்களும் இஸ்லாத்திற்கு மிகக் கடுமையான எதிரிகளாக இருந்தனர். மேலும் இந்த இருவரும் உயர்ந்த பரம்பரையைக் கொண்டும், வலிமையானவர்களாகவும் இருந்தனர்.

- நிச்சயமாக, அல்லாஹ் உமர் இப்னு அல்கத்தாப் (ரலி) அவர்களை நபி (ஸல்) அவர்களை ஆதரிப்பதற்கும், இஸ்லாத்திற்குப் பெருமை சேர்ப்பதற்கும் தேர்ந்தெடுத்தான்.

- உமர் (ரலி) அவர்கள் அபூஜஹ்ல் உறவினர் ஆவார். மேலும், நபித்துவ ஆரம்பகாலத்தில் இஸ்லாத்தைக் கடுமையாக எதிர்த்தவர்களில் ஒருவர்.

- ஸஹீஹ் முஸ்லிமின் ஒரு அறிவிப்பில், உமர் (ரலி) அவர்களே இந்த சம்பவத்தை விவரிக்கிறார்கள்.

- அறியாமை கால நாட்களில் ஒரு மாலை வேளையில் உமர் (ரலி) அவர்களுக்கு மது அருந்தும் ஆசை ஏற்பட்டது. ஆனால் அப்போது, அவரது நண்பர்கள் மற்றும் தன்னோடு மதுகுடிக்கும் தோழர்கள் யாரையும் அவர்களால் காண முடியவில்லை.



- உமர் (ரலி) அவர்களைத் தேடினார்கள், ஆனால் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இறுதியாக அவர்கள் மது விற்பனையாளர் இடத்திற்குச் சென்றார்கள்; ஆனால் அவரும் அங்கு இல்லை.

- சலிப்படைந்து உமர் (ரலி), தற்போது குடிக்கும் எண்ணத்திலிருந்து விடுபட, கஃபாவிற்கு செல்ல முடிவு செய்தார்கள்.

- அங்கு சென்றதும், நபி (ஸல்) அவர்கள் தனியாக குர்ஆன் ஓதுவதைக் கண்டார்கள்.

- தங்களின் முன்னோர்களை அவமதித்து, குடும்பத்தில் பிளவை ஏற்படுத்திய இவரைப் பழிவாங்க இது சரியான நேரம் என்று உமர் (ரலி) மனதிற்குள் நினைத்துக் கொண்டார்கள்.

## பகுதி 4: உமர் (ரலி) இதயத்தில் இஸ்லாம் நுழைந்த நிகழ்வு

- உமர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களை அணுகும்போது குர்ஆன் ஓதும் சப்தத்தைக் கேட்க முடிந்தது.

- உமர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களைத் தாக்கும் நோக்கத்துடன் மெதுவாகப் பின்புறமிருந்து வந்தார்கள்.

- அவர் தாக்குவதற்கு முன்பே, குர்ஆன் வசனங்கள் அவரைச் சென்றடைந்தன. அந்த வசனங்கள் மிகவும் அழகாக இருந்ததால், அவர் அதைக் கேட்கத் தொடங்கினார்.

- அப்போது நபி (ஸல்) அவர்கள் ஸூரா அல்ஹாஃக்ஃகாவை (69) ஓதிக்

கொண்டிருந்தார்கள். உமர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் மூலம் அல்லாஹ் தன்னுடன் பேசுவது போல் உணர்ந்தார்கள்.

- இந்த அழகான வசனங்கள் எங்கிருந்து வருகின்றன என்று உமர் (ரலி) ஆச்சரியப்பட்டார்கள். இது ஓர் அற்புதமான கவிஞரின் வார்த்தைகளாக இருக்க வேண்டும் என எண்ணினார்கள்.

- அந்த நேரத்தில், நபி (ஸல்) அவர்கள், ''இது ஒரு கவிஞனின் சொல்லன்று; எனினும், நீங்கள் மிகவும் சொற்பமாகவே நம்புகிறீர்கள்'' (அல்ஹாஃக்ஃகா 69:41) என்ற வசனத்தை ஓதினார்கள்.

- பிறகு உமர் (ரலி), இது ஒரு மந்திரவாதி அல்லது புத்திசாலியின் வார்த்தைகளாக இருக்க வேண்டும் என நினைத்தார்.

- அப்போது நபி (ஸல்) அவர்கள் அடுத்த வசனத்தை ஓதினார்கள்: ''இது ஒரு குறிகாரனின் சொல்லுமன்று; எனினும், நீங்கள் சொற்பமாகவே இதை நினைத்துப் படிப்பினைப் பெறுகிறீர்கள்'' (69:42).

- பின்பு உமர் (ரலி), 'இது எங்கிருந்து வருகிறது?' என யோசிக்கலானார்கள்.

- அப்போது நபி (ஸல்) அவர்கள், ''அகிலத்தாரின் இறைவனிடமிருந்து இது இறக்கியருளப்பட்டதாகும்'' (69:43) என்று ஓதுகிறார்கள்.

- அப்போது உமர் (ரலி), ''இதை முஹம்மது (ஸல்) அவர்கள் கண்டுபிடித்திருக்கலாம்'' என எண்ணினார்கள்.

- அப்போது அடுத்த சில வசனங்கள் அவரை அடைகிறது: ''அன்றியும் நம் சொற்களில் சிலவற்றை இவர் (நபி (ஸல்)) பொய்யான கருத்துக்களை கூறி இருப்பாரானால், அவருடைய வலக்கையை நாம் பலமாகப் பிடித்து, பின்னர், அவருடைய நாடி நரம்பைத் நாம் துண்டித்துவிடுவோம். அன்றியும், உங்களில் எவரும் (நாம்) அவ்வாறு செய்வதைத் தடுக்க முடியாது.'' (69: 44-47)

- இவ்வாறாக இஸ்லாம் தனது இதயத்தில் முதல் முறையாக நுழைந்தது என்றும், இஸ்லாத்தைப் பற்றி யோசித்து, வியந்து வீட்டிற்குத் திரும்பியதாக உமர் (ரலி) இந்த அறிவிப்பை முடிக்கிறார்கள்.